*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026
Available online at: www.tamilmanam.in

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p404-413** | *Original Research Paper*

# தமிழ் இலக்கியங்களும் கல்வெட்டுகளும் வெளிப்படுத்தும் இசைக்கருவிகள்: ஓர் விரிவான புலமைத்துவ ஆய்வு

Musical Instruments Revealed by Tamil Literature and Inscriptions: A Comprehensive Scholarly Study

**முனைவர் ஜோ.அந்தோணி ஜெய ஷீலா,**
இணைப்பேராசிரியர், பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மண்ணிவாக்கம், சென்னை.
**Dr. J. Anthony Jaya Sheela,**
*Associate Professor, PERI College of Arts and Science, Mannivakkam, Chennai.*
*Email: jsheelabritto@gmail.com.*

**ச.பாக்கியலெட்சுமி,**
இரண்டாம் ஆண்டு, இளங்கலைத் தமிழ்,
பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்ணிவாக்கம், சென்னை,
**S. Bhagyalakshmi,**
*Second Year, B.A. Tamil, PERI College of Arts and Science, Mannivakkam, Chennai.*
*Email: sbagya@gmail.com.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 01-08-2026
Accepted: **06-08-2026**

*Corresponding Author Email: jsheelabritto@gmail.com

**Abstract:** Tamil literature contains extensive references to various musical instruments such as Yazh, flute (Kuzhal), Murasu, Parai, Tannumai, Pandil, Kinnaram, and Tudi. Sangam literature glorifies the Yazh as an exceptionally fine melodic instrument, and literary evidence indicates that it was played by troupes of male (Panar) and female (Viraliyar) bards. The 18th verse (Nurpa) of Akattinaiyiyal in Tolkappiyam Porulatikaram highlights the Yazh and Parai as fundamental cultural treasures of the Tamil way of life. The musical intricacies of the ancient Tamils are elaborately explained across Tolkappiyam, Ettuthokai (Eight Anthologies), Pattuppattu (Ten Idylls), Silappatikaram, Thevaram, and medieval inscriptions. This paper presents an in-depth analysis of the origin, structure, crafting techniques, usage, and ensemble dynamics of the four categories of musical instruments—percussion (Thorkaruvi), wind (Kaatrukaruvi), stringed (Narambukaruvi), and idiophones/cymbals (Kanjakaruvi)—as found in Tamil literature and archaeological records.

**Keywords:** *Tamil Musical Instruments, Yazh, Bamboo Flute (Veynguzhal), Percussion Instruments (Thorkaruvigal), Idiophones (Kanjakaruvi), Tolkappiyam, Silappatikaram, Bhakti Literature.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களில் யாழ், குழல், முரசு, பறை, தண்ணுமை, பாண்டில், கின்னரம், மற்றும் துடி போன்ற பல்வேறு இசைக்கருவிகள் குறித்து விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் யாழ் மிகச் சிறப்பான பண்ணிசைக் கருவியாகப் போற்றப்பட்டதுடன், பாணர் மற்றும் விறலியர் குழுவினர் இதனைப் பயன்படுத்தி இசைத்ததாக இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல் 18-ஆம் நூற்பா தமிழர் வாழ்க்கை நெறியின் அடிப்படைப் பண்பாட்டுக் கருவூலங்களாக யாழையும் பறையையும் குறிப்பிடுகிறது. பண்டைக்காலத் தமிழர்களின் இசைக்கலை நுணுக்கங்கள் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், தேவாரம் மற்றும் இடைக்காலக் கல்வெட்டுகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரை தமிழ் இலக்கியங்கள் மற்றும் தொல்லியல் சான்றுகளில் காணப்படும் தோற்கருவி, காற்றுக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி ஆகிய நான்கு வகை இசைக்கருவிகளின் தோற்றம், அமைப்பு, உற்பத்தி நுட்பங்கள், பயன்பாடு மற்றும் கூட்டு இசை இயக்கம் என்பனவற்றை ஆழமாகப் பகுப்பாய்வு செய்கிறது.

**முக்கியச் சொற்கள்**

தமிழ் இசைக்கருவிகள், யாழ், வேய்ங்குழல், தோற்கருவிகள், கஞ்சக்கருவி, தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியம்.

## 1. முன்னுரை

இசையுருவங்களைப் பிறழாமல் வெளிப்படுத்துவதற்கு இசைக்கருவிகள் முதன்மைச் சாதனங்களாக விளங்குகின்றன. தமிழ் இசைக்கருவிகள் என்பன பண்டையத் தமிழர் தம் பண்பாட்டு அடையாளமாகப் போற்றிப் பயன்படுத்திய கலைக் கருவிகளாகும். சங்க காலத்தில் ஆண்கள், பெண்கள் மட்டுமல்லாது பாணர், பாடினியர், விறலியர் (ஆடல் மகளிர்), கூத்தர், பொருநர், கண்ணுளர், வயிரியர் மற்றும் கோடியர் போன்ற தொழில்முறை இசைக்கலைஞர்கள் பண்ணும் தாளமும் கூடிய இசைப்பாடல்களைப் பண்ணிசைக் கருவிகள் மற்றும் தாளவிசைக் கருவிகளின் துணையோடு சிறப்பாகப் பாடியுள்ளனர். பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை நூல்கள், குறிப்பாக பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய ஆற்றுப்படை நூல்கள் அக்காலத்தியத் தமிழர் தம் ஒப்பற்ற இசைத்திறனை எடுத்தியம்புகின்றன.

பண்டைக் காலங்களில் இசைவாணர்கள் துளைக் கருவியாக மூங்கில் குழலையும் நரம்புக் கருவியாக யாழையும் இசைத்து இசையின் நுண்ணிய ஏற்ற இறக்கங்களை நன்கு

**DOI: https://doi.org/10.63300/tm12032026.32**

வெளிப்படுத்தினர். பண்டைத் தமிழரின் இசைக் கலை நுட்பத்தைக் குறிப்பிடும் போது சிலப்பதிகார இந்திரவிழவு ஊரெடுத்த காதையில் இளங்கோவடிகள் பின்வருமாறு பாடுகிறார்:

"குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்

வழுவின்றிஇசைத்து வழித்திறன் காட்டும்"1

அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்

இப்பாடல் வரிகள் குழலிலும் யாழிலும் குரல் முதலாகத் தொடங்கும் ஏழிசைகளான குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகியவற்றை பிழையின்றி இசைத்து, அவற்றின் வழிப்பிறக்கும் பண்களைத் திறம்பட வெளிப்படுத்தும் இசைக் கலைஞர்களின் மாண்பினை விவரித்துக் காட்டுகின்றன. பண்டைய தமிழர் இசை மற்றும் இசைக்கருவிகள், கலை மற்றும் கலாச்சாரத்தின் முக்கிய அங்கமாக விளங்கியதை இலக்கியங்களும் கோவில் கல்வெட்டுகளும் சிற்பங்களும் தெள்ளத்தெளிவாக உணர்த்துகின்றன.

**2. தமிழரின் திணை வாழ்வியலும் இசைக்கருவிகளின் வகைப்பாடும்**

உருவாக்கப்படும் பொருட்கள் மற்றும் ஒலி எழுப்பும் முறைகளின் அடிப்படையில் இசைக்கருவிகளைத் தோற்கருவி, காற்றுக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். தொல்காப்பியர் நிலங்களின் கருப்பொருள்களைப் பற்றிக் கூறும்போது, ஒவ்வொன்றிற்கும் உரிய பண்ணிசைக் கருவியாகிய யாழையும், தாளவிசைக் கருவியாகிய பறையையும் வரையறுக்கின்றார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் "தெய்வ முணாவே மாமரம் புட்பறை செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ இவ்வகை பிறவும் கருவென மொழிப" (தொல். பொருள். 964) என நிலத்தின் கருப்பொருளாகப் பறையும் யாழும் குறிப்பிடப்படுகின்றன.

நிலவியல் பாகுபாட்டின் அடிப்படையில் ஐந்திணைகளுக்கும் உரிய பண்ணிசைக் கருவிகளும் தாளவிசைக் கருவிகளும் அமைந்திருந்த முறையினைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது:

| **திணை** | **நில அமைப்பு** | **உரிய பண்ணிசைக் கருவி (யாழ்)** | **உரிய தாளவிசைக் கருவி (பறை/முரசு)** |
|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | குறிஞ்சியாழ் | தொண்டகப் பறை |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | முல்லையாழ் | ஏறுகோட்பறை / சாதாரிப் பறை |

**DOI: https://doi.org/10.63300/tm12032026.32**

| **திணை** | **நில அமைப்பு** | **உரிய பண்ணிசைக் கருவி (யாழ்)** | **உரிய தாளவிசைக் கருவி (பறை/முரசு)** |
|---|---|---|---|
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | மருதயாழ் | மணமுழவு / நெல்லரிப் பறை |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | நெய்தலியாழ் | மீன்கோட்பறை |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் | பாலையாழ் | துடி / சூறைகோட்பறை |

### 3. தோற்கருவிகள் (Membranophones)

#### 3.1 தவிலின் அமைப்பும் வரலாற்றுப் பின்னணியும்

தவில் என்ற சொல்லிற்கு குற்றமில்லாத வாத்தியம் என்று பொருள். தவில் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் சந்தபாவலர் அருணகிரிநாதர் ஆவார். கோவில் விழாக்களிலும் சுப காரியங்களிலும் பயன்படுத்தப்படும் மங்கள வாத்தியமாகவும் ராஜ வாத்தியமாகவும் தவில் விளங்கி வருகின்றது. தவில் ஆரம்பத்தில் கூம்பு வடிவத்தில் இருந்தது, பின்னர் பீப்பாய் வடிவமைப்பு பெற்றுள்ளது. பலா மரத்தில் உருளை வடிவமாக உட்புறத்தில் குடைந்து எடுக்கப்படுகின்றது. தவிலின் இரு பக்கங்களும் ஆட்டுத்தோல்களால் ஆனவை; தவிலின் இரு பக்கங்களும் வலந்தலை, இடந்தலை என அழைக்கப்படுகின்றன. தவில் வார்களுக்கு எருமை மாட்டுத் தோல் பயன்படுத்தப்படுகிறது. இசைப் பாட்டின் தாள அறுதியை புலப்படுத்தி இசை வளர்ச்சிக்கு துணை செய்வதுடன் கேட்போரது உள்ளத்திலும் ஒரு உற்சாகத்தை உருவாக்குகிறது.

#### 3.2 தோற்கருவிகளின் வகைத்தொகையும் இலக்கியச் சான்றுகளும்

அடியார்க்குநல்லார் தமது சிலப்பதிகார உரையில் தோல் கருவிகளின் முப்பது வகைகளை விரிவாக விளக்கியுள்ளார். அவையாவன: படாகம், பேரிகை, இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, அந்தரிமுழவு, சந்திர வளையம், தண்ணுமை, மொந்தை, தக்கை, கணப்பறை, தமருகம், தடாரி, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப் பறை, துடி, மற்றும் பெரும்பறை என்பனவாகும்.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.32**

பண்டைய தமிழ்ச் சமூகத்தில் பறை என்பது செய்தி அறிவிக்கும் முதன்மைத் தகவல் தொடர்பு சாதனமாகவும், போர்ச் சூழலை உணர்த்தும் கருவியாகவும் திகழ்ந்தது. புறநானூறு, அகநானூறு போன்ற சங்க நூல்களில் முரசு, தண்ணுமை, கிணை, தடாரி போன்ற தோற்கருவிகளின் பேரொலி வர்ணிக்கப்பட்டுள்ளது. போர்க்களத்தில் முரசின் முழக்கம் மேகத்தின் இடிமுழக்கத்தைப் போலவும், மழைபோலப் பொழியும் அம்புகளின் விரைவை வெளிப்படுத்துவதாகவும் அமைந்தது என அகநானூறு விவரிக்கிறது. கல்வெட்டுகளில் குடமுழா, இடக்கை போன்ற தோற்கருவிகள் கோவில் வழிபாட்டு நிகழ்வுகளில் முக்கிய பங்கு வகித்தமை சுட்டப்படுகின்றது.

### 4. காற்றுக்கருவிகள் (Aerophones)

### 4.1 வேய்ங்குழலின் உற்பத்தி நுட்பங்களும் இசை அமைப்பும்

அடர்ந்த மூங்கில் காடுகளில் வண்டுகள் மூங்கிலைத் துளை செய்ய, அத்துளைகளின் வழியே காற்று புகுந்து ஓசை எழுப்பியது. அது கேட்போர் செவிக்கு ஒரு இன்பமயமாக அமைந்தது. அதைக் கண்ட மக்கள் அவ் இசையை தாமும் எழுப்ப வேண்டும் என எண்ணி மூங்கில் கோலை வெட்டி எடுத்து, அதன் மேல் பல துளைகளை அளவுபடத் துளைத்து முதலில் அமைத்த இசைக் கருவி புல்லாங்குழல் ஆகும். அது புல் வகைகளில் ஒன்றான மூங்கிலால் செய்யப்பட்டமையால் புல்லாங்குழல் என்றும், வேய்ங்குழல் என்றும் வழங்கப்பட்டது.

குழலின் உற்பத்தி மரபு மிகத் துல்லியமான அளவீடுகளைக் கொண்டது. குழலின் நீளம் இருபது விரல் ஆகவும், சுற்றளவு நாலரை விரல் ஆகவும் அமையும். துளையிடும் இடத்தில் நெல் அரிசியில் ஒரு பாதி மரன் நிறுத்திக்கடைந்து வெண்கலத்தால் அணைசு பண்ணி, இடமுகத்தை அடைத்து, வல முகம் வழியாகக் காற்று விடப்படும். இவற்றில் உள்ள ஏழு துளைகளிலும் ஏழு விரல்கள் வைத்து ஊதப்படும். இத்துளைகளின் இடைப் பரப்பு ஒருவிரல் ஆகக் கொள்ளப்படும். இடக்கையில் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரல்களும், வலக்கையில் பெருவிரல் நீங்கிய ஏனைய நான்கு விரல்களும் வைத்து குழலை வாசித்தல் வேண்டும். ஏழு துளைகளிலும் சரிகமபதநிச என்னும் ஏழு எழுத்துகளும் மாத்திரைப் படுத்தி தொழில் செய்ய ஏழிசை பிறக்கும்.

### 4.2 ஆயர் வாழ்வியலும் பிற காற்றுக்கருவிகளும்

தேவாரப் பாடல்களில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் காற்றுக்கருவிகளின் இசையினைக் குறிப்பிட்டுள்ளனர். திருநாவுக்கரசர் தேவாரத்தில் திருவதிகை விரட்டானப் பதிகத்தில் பின்வருமாறு பாடுகிறார்:

"குழலோடு குக்கரை கைத்தாளம் மொந்தை

குறப்பூதம் முன் பாடத் தானாடுமே."2

**DOI: https://doi.org/10.63300/tm12032026.32**

வேய்ங்குழல் ஊதுவதில் சிறந்த பயிற்சி உடையவர்கள் முல்லை நில மக்களாகிய ஆயர்கள் ஆவர். ஆயர்கள் தங்கள் ஆநிரைகளைக் குழலூதி ஒன்று திரட்டுவர் என்றும், அவ்வாறு திரட்டும் போது அதில் மந்த மதியுடையதெனப்படும் எருமையும் தன்பால் ஈர்த்து நிறுத்தும் முறையில் முல்லை நிலத்தில் வாழும் ஆயர் வேய்ங்குழலால் இனிய இசையினை வளர்த்தார்கள் என்ற செய்தியும் இலக்கியங்கள் வாயிலாகப் புலனாகிறது. மேலும், குழலுடன் தூம்பு, வயிர், கோடு, சங்கு முதலான பல காற்றுக்கருவிகளும் பயன்பாட்டில் இருந்தன.

### 5. நரம்புக் கருவிகள் (Chordophones)

### 5.1 வில்யாழின் தோற்றமும் யாழின் வரலாற்றுப் பரிணாமமும்

முற்காலத்தில் யாழ் என்ற நரம்புக்கருவி கொண்டே பண்ணிசைத்தனர். அதன் பின்னர் பல்வேறு நாட்டினரின் படையெடுப்பிற்குப் பின் அந்த நாட்டவர் பயன்படுத்தும் இசைக் கருவிகளையும் இணைத்துக்கொண்டனர். வயலின், வீணை, கோட்டு வாத்தியம், தம்புரா போன்ற இசைக் கருவிகள் நரம்புக் கருவிகள் ஆகும். யாழ் என்பது பண்டைய இசைக்கருவிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தது ஆகும். யாழ் என்பதற்கு நரம்புகளால் யாக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்பது பொருளாகும். கம்பி கருவிகளில் வரும் ஒலி வேறுபாட்டுக்குக் காரணம் கம்பிகளின் தடிமன்களேயாகும். பண் வகைகளை "யாழின் பகுதி" எனவும், இசை நூலை "நரம்பின் மறை" எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் குறித்துள்ளார். நரம்புக் கருவிகளாகிய யாழினைக் கொண்டே பண்களும் அவற்றின் திறன்களும் ஆராய்ந்து வகைப்படுத்தப்பட்டன.

முற்காலத்தில் வேட்டைத் தொழிலை மேற்கொண்ட மக்கள் அம்புகளை எய்யும்போது, அது நெடுந்தொலைவு செல்வதற்கு ஏற்றவாறு வில்நாணினை இறுகக் கட்டினர். வில்லனின் இறுக்கத்தைத் தெரிந்து கொள்வதற்காக கைவிரலால் நாணினைத் தெறித்து அறிந்து கொண்டனர். அதில் இருந்து எழும் ஓசையை அடிப்படையாக வைத்து கருவிகளை உருவாக்கினர். இவ்வாறு வில்லின் நீளத்தைக் கூட்டியும் குறைத்தும் பல்வேறு இன்னிசைகளை உருவாக்கினர். இங்ஙனம் வெவ்வேறு இன்னிசை தரும் பல்வேறு விற்களை ஒன்று சேர்த்து நம் முன்னோர்கள் உருவாக்கிய நரம்புக் கருவி வில்யாழ் ஆகும்.

### 5.2 யாழின் முதன்மை வகைகளும் நரம்பு அமைப்பும்

பண்டையத் தமிழர்கள் அனுபவித்து உணர்ந்து அமைத்த யாழ்கள் பல வகைப் பட்டன. ஆயிரம் நரம்புகளை உடைய 'பெருங்கலம்' என்னும் ஆதியாழும் பண்டைய மக்களால் பயன்படுத்தப்பட்டது. முதன்மையான யாழ் வகைகளின் விவரங்கள் கீழே அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளன:

**DOI: https://doi.org/10.63300/tm12032026.32**

| **யாழின் பெயர்** | **நரம்புகளின் எண்ணிக்கை** | **உருவ அமைப்பு மற்றும் இசைப் பண்புகள்** |
|---|---|---|
| பேரியாழ் | 27 நரம்புகள் | ஏழிசைகளிலும் மெலிவு, சமன், வலிவு என்னும் மூன்று தானங்களிலும் முறையே இசைப்பதற்கு ஏற்றவாறு கட்டப்பட்டது. |
| மகரயாழ் | 19 நரம்புகள் | மகரமீன் வடிவினை உடையதாக தண்டின் அமைப்பைக் கொண்டு உருவாக்கப்பட்டது. |
| சகோடயாழ் | 14 நரம்புகள் | மெலிவு 4, சமன் 7, வலிவு 3 என நரம்புகளை உடையதாய் செவிக்கு இன்பம் தரும் யாழ். |
| செங்கோட்டியாழ் | 7 நரம்புகள் | வளைவாக செய்யப்பட்டிருந்த கோடு என்னும் உறுப்பானது நிமிர்ந்து நேராக அமைந்த யாழ்; ஏழிசைகளுக்கும் தலா 1 நரம்பு. |

### 5.3 தமிழ் இலக்கியங்களில் யாழின் நுட்பங்கள்

திருவள்ளுவர் திருக்குறளில் யாழின் வடிவத்தையும் அம்பு வடிவத்தையும் ஒப்பிட்டுப் பண்பாட்டுக் கருத்தை வெளிப்படுத்துகிறார்:

" கணைகொடிது யாழ்கோடு செவ்வி தாங்கன்ன
வினைபடு பாலாற் கொளல்" 3

அம்பு வடிவத்தால் செம்மையாயினும் செயலால் கொடிது; யாழ் கோட்டால் வளைந்தும் செயலால் செவ்வியது. மக்களின் உயர்வை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயலால் உணர வேண்டும் என்னும் திருக்குறளின் கருத்து யாழின் இயல்பைக் காட்டுகிறது. அகநானூற்றில் (பாடல் 102) குறிஞ்சிப் பண்ணைப் பாடிய குறத்தியின் யாழிசையைக் கேட்டு தினைப் பயிரை உண்ண வந்த யானை மெய்மறந்து உறங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது.

## 6. கஞ்சக் கருவிகள் (Idiophones)

### 6.1 கஞ்சக்கருவிகளின் இயல்பும் தாளக் கோட்பாடும்

உலோகங்களால் வார்க்கப்படுபவை கஞ்சக் கருவிகள் எனப்படும். ஜால்ரா, சிங்கி, மணி, ஜாலர் என பல பெயர்களால் இவை அழைக்கப்படுகின்றன. இசையின் கால அளவுகளைச் சீர்படுத்தி நேர்கோட்டில் பயணிக்கச் செய்வதே தாளம் ஆகும். இசையும் தாளமும் உடலும் உயிரும்

போன்றது; பிரிந்தால் இரண்டுமே இறந்துபோகும். நாதஸ்வரம், மிருதங்கம், கடம், கஞ்சிரா, கொன்னக்கோல் உள்ளிட்ட எல்லா வாத்தியங்களையும் தாளம்தான் கட்டுப்படுத்துகிறது.

பண்டைய காலத்தில் இரண்டு மரத்துண்டுகளைத் தாளக் கருவியாகப் பயன்படுத்தி, பின்னர் உலோகத் துண்டுகளைப் பயன்படுத்தினர். தாளக் கருவியின் வடிவத்திற்கு ஏற்றவாறு இலைத்தாளம் என்றும் குழித்தாளம் என்றும் பெயர் சூட்டினர். கோலாட்டம், வில்லுப்பாட்டு, நாட்டுப்புறப்பாடல், ஓதுவார்கள் போன்றோர் இக்கருவியைப் பயன்படுத்தினர். கஞ்சக் கருவிகள் என்பது வெண்கலத்தால் அமைக்கப்பட்ட தாளம் முதலான கருவிகள் அடங்கும். ஆடலுக்கும் பாடலுக்கும் தாளத்தின் ஜதியாக விளங்குதலால் தாளம் என்ற காரணப் பெயரும் உண்டு.

### 6.2 திருமுறை மற்றும் பக்தி இலக்கியங்களில் கஞ்சக்கருவிகள்

இசை நாடகங்களிலும் கோவில் வழிபாடுகளிலும் தாளம் மிகவும் இன்றியமையாதது. தேவாரப் பாடல்களில்:

"தண்டும் தாளமும் குரலும் தண்ணுமை கருவியும்"

மற்றும்

"கொக்கரை தாளம் வீணை பாணி செய்குழகர்"

என்னும் தேவாரப் பாடல் வரிகள் மூலம் ஆடலுக்கும் பாடலுக்கும் தாளம் மற்றும் கஞ்சக்கருவிகள் மிகவும் முக்கியம் என்பதை அறிய முடிகிறது.

### 7. பண்டையத் தமிழிசைக் கூட்டுவாத்திய அமைப்பும் மறைந்த இசை நூல்களும்

பண்டையத் தமிழர்கள் தனித்தனி இசைக்கருவிகளை இசைப்பதுடன் நிற்காமல், பல கருவிகளை ஒன்றிணைத்து கூட்டு இசையாக (Orchestral Harmony) வாசிக்கும் பெருமுறைமையைக் கொண்டிருந்தனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பல்வேறு இசைக்கருவிகள் ஒன்றுக்கொன்று இணைந்து இசைத்த ஒழுங்கமைப்பைப் பின்வருமாறு விளக்குகிறார்:

"குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணும்மைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை"

இப்பாடல் வரியின் மூலம் குழலின் ஓசையைத் தழுவி யாழும், யாழின் ஓசையைத் தழுவித் தண்ணுமையும், தண்ணுமைக் கருவியின் தாளத்தைப் பின்பற்றி முழவும், முழவோடு இணைந்து ஆமந்திரிகை என்னும் இடக்கைக் கருவியும் ஒத்திசைவாக இசைக்கப் பெற்றன என்பதை அறியலாம்.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.32**

தமிழில் இசை இலக்கணங்கள் குறித்து எழுதப்பட்டு, பிற்காலத்தில் வழக்கொழிந்து போன பல பழம்பெரும் இசை நூல்களை உரையாசிரியர்களான அடியார்க்குநல்லார், பேராசிரியர்கள், இறையனார் களவியல் உரையாசிரியர் ஆகியோர் மேற்கோள் காட்டியுள்ளனர். அவற்றுள் முக்கிய இசை நூல்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

| **உரையாசிரியர்** | **மேற்கோள் காட்டும் பழமையான தமிழ் இசை நூல்கள்** |
|---|---|
| இறையனார் களவியல் உரையாசிரியர் | முதுநாரை, முதுகுருகு |
| அடியார்க்குநல்லார் (சிலப்பதிகார உரை) | இசை நுணுக்கம், பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இந்திரகாளியம் |
| அரும்பத உரை ஆசிரியர் | பதினாறு படலம் |
| யாப்பருங்கல விருத்தி உரை ஆசிரியர் | வாய்ப்பியம், குலோத்துங்கன் இசை நூல் |

### 8. முடிவுரை

குரலிசை எவ்வளவு இனிமையுடையதாக இருந்தாலும், அதனோடு இசைக்கருவிகளும் சேர்ந்து இசைக்கும்போது அந்த இசையானது மேலும் கேட்பதற்கு இனிமையாக இருக்கும். அக்கருவிகள் காலத்திற்கு காலம் மாறுபட்டாலும் காற்றுக்கருவி, கம்பிக்கருவி, தோல்கருவி, தாளக்கருவி இவற்றுள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு முடியும். தமிழ் இலக்கியங்களும் கல்வெட்டுகளும் உணர்த்தும் தமிழர்களின் இசைச் செழுமை, அவர்தம் பண்பாட்டு உயர்வை உலகிற்குப் பறைசாற்றுவதாக அமைவதோடு மட்டுமன்றி, உலக இசை வரலாற்றுக்கே தமிழர்களின் தாள மற்றும் பண்ணிசைக் கோட்பாடுகள் முன்னோடியாகத் திகழ்ந்தன என்பதை மெய்ப்பிக்கிறது.

### 1. உள்ளடக்க மேற்கோள்கள் (In-Text Citations)

- **சிலப்பதிகாரம்:** (*சிலப்பதிகாரம்*, இந்திரவிழவு ஊர்எடுத்த காதை 35)
- **தேவாரம்:** (*தேவாரம்*, திருவதிகை விரட்டானம் 7)
- **திருக்குறள்:** (*திருக்குறள்* 279)

### பார்வை நூல்கள் (Works Cited)

[1.] *திருக்குறள்.* ஸ்ரீ இந்து வெளியீடு.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.32**

[2.] நடராஜன், புலவர். *திருநாவுக்கரசர் தேவாரம்*. உமா பதிப்பகம்.

[3.] வெள்ளைவாரணன், க. *இசைத்தமிழ்*. பாரி நிலையம்.

**ஆசிரியரின் முரண்பாட்டின் அறிவிப்பு அறிக்கை**

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர்கள், இக்கட்டுரையாக்கத்திலோ அல்லது இதில் செய்யப்பட்டுள்ள ஆய்வுக் கருத்துகளிலோ எவ்வித நிதிசார் அல்லது சுயநல முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை எனத் தெள்ளத் தெளிவாக அறிவிக்கின்றனர்.